பாலர் கல்வி

தொகுதி 28 | சோபகிருதுஸ்ரீ கார்த்திகை - மார்கழிமீ 1963 டிசம்பர் | பகுதி 9

தலையங்கம்

அறிவும், ஆற்றலும்

நாட்டின் முற்போக்கிற்கு அடிப்படையாவன அறிவும் ஆற்றலுமாகும். இவை மக்களிடையே பரவித் தழைத்து ஓங்கினுல்தான் நாடு மேன்மையுறும். சமூக வளர்ச்சிக்கு ஆணிவேராகிய கல்வி கற்பிக்கப் பெறும் இளமைப் பருவத்திலேயே இவை பரவப் பெருமுயற்சி கொள்ளுதல் இயல்பு. நீரும் நிழலும் உடையும்போல் கல்வி யாவர்க்கும் பிறப்புரிமை என்ற கொள்கை நிலவும் இக்காலத்திலே கற்கும் மாணவர்களது எண்ணிக்கை பெருகி வருவதால், வகுப்பறையில் கற்கும் சிறுர்களது எண்ணிக்கை வரம்பு கடந்து நிற்பதாலும், பள்ளிகளின் எண்ணிக்கை பெருகுவதாலும், கற்பிக்கப் பயனுகும் உபகரணங்களும் வசதிகளும் வேண்டிய அளவிலே அளிக்க இயலவில்லே. அன்றியும் வேண்டிய அளவிலே நல்லாசிரியர்கள் கிடைப்பதும் அரிதாகின்றது. எனினும் இயன்றவளவிலே கல்வியின் தரத்தை உயர்த்தச் சில திட்டங்கள் உருவாகி வந்துள்ளன. இவற்றுள் ஒன்று, அண்மையிலே வெளிவந்த ஞானத்தந்தைத் திட்டம் (God-father Scheme) என்பதாகும். இத்திட்டத்தின் பெயரை ஆராய்ந்தால், பள்ளிக் கல்வி பற்றி நம் மனப்பான்மை எவ்வாறிருக்க வேண்டும், நம்மிடம் எதிர் பார்ப்பது என்ன என்பன புலனுகும். குழந்தைகளது நலனைக் கவனிக்கப் பெற்றோர்கள் இருந்தபோதிலும், குழந்தைகளது நலந்தில் ஊக்கங்கொள்ளும் ஒருவர், தாம் ஞானத் தந்தையாக (god-father) விரும்பிப் பெற்றோர்களை மகிழ்விப்பது மேலை நாடுகளில் நிகழ்வதாகும். இவ்வாறே சிறுர்களின் கல்விக்காக உழைத்துவரும் ஆசிரிய ஆசிரியைகட்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் ஊட்டும் வண்ணம் இத்திட்டம் வெளிவந்துள்ளது.

பெரும்பான்மையான பள்ளிகளின் நிலையை ஆராய்ந்தால், இத்திட்டத்தின் சீர்மை ஒருவாறு உணரலாகும். கற்கவேண்டுவன எண்ணும் எழுத்தும் என்று நாம் இதுகாறும் கருதி வந்தோம், ஆங்கிலேயர் 3 Rs' (reading, writing, arithmetic) எனக் கருதி வந்தனர்; கல்வி கற்க வேண்டுவன 3 H's (Hand, head and heart) எனக் கருதுகின்றனர். இக்காலத்துப் பெரியோர். அதாவது சிறுர்கள் பண்டங்களைக் கையாண்டு

ஆராய்ச்சிகள் மூலம் அறிவு பெற வேண்டும், இவ்வாறு அநுபவங்களின் மூலம் அறிவு பெருகுவதால் உள்ளமும் அறிவு பெறுவதைத் தானுகவே நாடும் என்பது இவர்களது கொள்கையாகும். அறிவு ஆராய்ச்சிகளின் மூலம் பெருகவேண்டியிருப்பதால் ஆராய்ச்சிக்குச் சாதனமாக உபகரணங்கள் வேண்டும். விஞ்ஞான வகுப்பிற்காக ஆராய்ச்சிச் சாலைகள் வேண்டும் சரிதம் பூகோளம் இவை கற்கத் தேசப்படங்கள், சித்திரங்கள் வேண்டும். அன்றியும் திரைப்படங்கள் காட்ட வசதியும் வேண்டும். இவ்வாருன வசதிகள் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றுள்தான் உள்ளன. இவை அருகாமையிலுள்ள பள்ளிகளிலும் பயனுறும் வண்ணம் செய்வது, இந்தத் திட்டத்தின் முதற் குறிக்கோளாகும்.

நல்ல வகையிலே கல்வி கற்பிப்பதற்கு அறிவும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரிய ஆசிரியைகள் தேவை. அநுபவம் வாய்ந்து கல்வி கற்பிக்கும் தொண்டிலே ஆழ்ந்து ஊறியவர்கள் கல்வியை நல்ல முறையிலே கற்பிப்பர். இவர்களது உதவியைக் கொண்டு கல்வியை எங்கும் நன்கு கற்பிப்பது அவசியமாகும். இக்காலத்தில் கல்விச் சாலைகளது எண்ணிக்கை ஓங்கிவருவதால் போதிய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை; பணியாற்றிவரும் ஆசிரியர்களுட் பெரும்பான்மையோர் போதிய அளவில் அநுபவம் வாய்ந்தவர்களுமல்லர். ஆதலால் அநுபவம் வாய்ந்தவர்கட்கும் ஏனை ஆசிரியர்கட்கும் தொடர்பு ஒன்றினை நிறுவினுல், கல்வியின் தரம் ஓங்குவது சாத்தியமாகும். இவ்வாருன தொடர்பிற்கு வாய்ப்பினை அளிப்பது இரண்டாவது குறிக்கோளாகும்.

இந்தத் திட்டப்படி உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்ருேடும் அருகாமையிலுள்ள உயர்நிலைத் துவக்கப் பள்ளிகள் (Higher elementary schools) சில இணைப்புப் பெறும். இப்பள்ளிகளின் தலைமை யாசிரியர்கள் மாதம் ஒரு முறையாவது ஒருங்குகூடித் தங்களது பள்ளிகளில் கல்வி கற்பிக்க வேண்டிய வசதிகளையும் முறையினையும் ஆராய்வர். இந்தத் தொடர்பு நிலைபெறும் வண்ணம் இப்பள்ளிகளில் நிகழும் கொண்டாட்டங்கள், விழாக்கள் இவற்றுள் தலைமையாசிரியர் யாவரும் ஒரு மனத்துடன் கலந்து கொண்டு, தாமும் பணியாற்றிப் பள்ளி யாசிரியர்களையும் ஊக்குவிப்பர். இதனுல் "யாவும் நமது பள்ளிகள், யாவரும் நமது சிறூர்கள், நாம் யாவர்க்கும் பொதுவாக உழைத்துச் சமூகம் ஓங்கவேண்டும்" என்ற பரந்த மனப் பான்மை பரவும்; கல்விப் பணியாற்றிவருவோரிடம் இருந்துவரும் உயர்வு தாழ்வு என்ற எண்ணம் அறவே நீங்கிவிடும். இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கிடையே ஒருமனப் பான்மை பெருகுவதன் விளைவாக, இப்போதுள்ள திட்டங்கள் பல மேலும் மேன்மையுறும். மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்குதல் ஏழை மாணவ மாணவியர்க்குப் புத்தகங்கள் அளித்தல் இவை போன்று தூய பணிகளை யாவரும் ஒரு மனத்துடன் ஈடுபட்டால், கல்வியின் வளர்ச்சிக்கு யாம் போதிய வகையில் உழைத்தவராவோம்.

இத்தகைய குறிக்கோள்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்தது, அறிவு ஆற்

றல் இவை வாய்ந்த பெரியோர்களை யும் சிறுர்களையும் கல்வியின் வளர்ச் சிக்காகத் தக்க முறையிலே பயன் படுத்திக் கொள்ளுவதாகும். சில பள்ளிகளிலே சித்திரம் வரைவதில் ஆற்றல் வாய்ந்த மாணவர்கள் இருப் பர்; இவர்களைச் சித்திரம் வரையச் செய்து, அச்சித்திரங்களைப் பாடங்கள் கற்பிக்கப் பயன்படுத்திக்கொள்ள லாம். மரவேலை, களிமண் வேலை இவைபோன்றவற்றுள் ஆற்றல் வாய்ந்தோர்களை ஊக்கி, அவசிய மான உபகரணங்களைச் செய்து கொள்ளலாம். மாணவர்க்கான பொருட்காட்சிகளிலே மாணவர்கள் மிகக் குறைந்த செலவிலே விஞ்ஞான உபகரணங்களும் தேசப் படங்களும் செய்திருப்பதைக் காண்கிருேம். இவர் களது ஆற்றல் பாழ்போகாமல் இவர் களுக்குத் தக்க முறையிலே உதவி செய்து, இவர்கள் உருவாக்கும் உப கரணங்களைப் பள்ளிகளில் பாடங் கற்பிக்கப் பயன்படுத்திக்கொள்ள லாம். ஆசிரிய ஆசிரியைகளாக நெடுங்காலம் பணியாற்றி இப்பணி யிலே தேறியவர்களது அநுபவங்கள் புதிதாக ஆசிரியப் பணியை எற்றுக் கொண்டவர்களுக்கு மிகமிகப் பயன் படும். பலதரப்பட்ட ஆற்றல் வாய்ந்த ஆசிரிய ஆசிரியைகள் அடிக்கடி ஒழுங்குகூடிக் கற்பிக்கும் முறைகளையும் தங்களது அநுபவங் களையும் எடுத்துக் கூறினுல் கல்வி யின் தரம் ஓங்கும். துவக்கப் பள்ளி களிலே மாதா மாதம் கூடும் கூட்டத் திலே இவ்வாறு அநுபவம் வாய்ந்த வர்களை அழைத்துக் கல்வி முறைகளை எடுத்துப் பகரச் செய்யலாம்.

இவ்வாருன கருத்துக்கள் பலர் மனத்தில் நெடுங்காலமாக ஊறி, இதன் பயனுக வெளிவந்த இந்தத் திட்டத்திற் செயற்பாலன யாவை என்பதை அண்மையிலே வெளியிட் டுள்ளனர்; இவற்றைச் சுருக்கமாக வரைவோம்:

1. உயர்நிலைப் பள்ளிக்கும் அத் துடன் இணைந்துள்ள உயர்நிலைத் துவக்கப் ப்ள்ளிகளுக்கும் தொடர்பு பின்வரும் வகைகளிலே பெறலாகும்; (1) மாதம் ஒரு முறை ஆசிரியர் களுடன் பழகுவது, (2) ஒரு பள்ளி யில் நிகழும் விழாக்களில் கலந்து கொள்ளுமாறு மற்றைப் பள்ளிகளின் ஆசிரியர்களை அழைப்பது, (3) உயர் நிலைப் பள்ளிகளில் நிகழும் போட்டி களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் மற்றைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களிற் சிலரை அழைப்பது, இத்தகைய நிகழ்ச்சிகள் மற்றைப் பள்ளிகளுக்குப் பொதுவாக நிறுவுவது, (4) மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்குதல் முதலியவற்றுள் யாவரும் கூடி ஈடு படுவது, (5) பள்ளிகளில் ஆற்றல் வாய்ந்த மாணவ மாணவியரது ஆற் றலைப் பயன்படுத்திக் கொள்வது, (6) உயர்நிலைப் பள்ளிகளிலும் உயர் நிலைத் துவக்கப் பள்ளிகளிலும் பரீட்சை எங்ஙனம் நிகழ்கின்றது என்று ஆராய்ந்து ஒருவருக்கொருவர் துணையாகத் தக்க வகையிலே பரீட் சைத் தாள்களைத் தயார் செய்து கல்வி யின் தரத்தை உயர்த்துவது; உயர் நிலைப் பள்ளியில் அத்துடன் இணைந் துள்ள பள்ளிகளிலிருந்து மாணவர் களைச் சேர்த்துக்கொள்வது.

2. ஆற்றல் வாய்ந்தவர்களது அநு பவத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வகைகள்: (1) புதிதாக வந்துள்ள ஆசிரியர் பார்த்துப் பழக்கப்பெறுவ தற்காகப் பாடம் கற்பித்தல்,

(2) மாதாந்தர பாட திட்டத்தை அமைத்தல், (3) கட்டுரை எழுதச் சிறுர்களுக்கு அளிக்கும் உதவி, கட்டுரைக்கான விஷயங்கள், கட்டுரைகளைத் திருத்தும் வகை, (3) உயர்நிலைப் பள்ளியிலுள்ள நூல் நிலையத்திலிருந்து இணைந்துள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு நூல்களைப் படிக்க அளிப்பது (4) புதிதாக வந்துள்ள ஆசிரியர்களது யோக்யதைகளைப் பெருக்குவதற்காக உதவிசெய்வது.

(3) கல்வி கற்பிப்பதற்கான உபகரணங்களைப் பயன்படுத்துதல்: (1) ஆராய்ச்சிச் சாலையில் பரிசோதனைகள் நிறுவி, இணைந்துள்ள பள்ளிகளிலுள்ள சிறுர்களை அழைத்துப் பார்க்கச் செய்வது, (2) திரைப்படக் காட்சிகளுக்கு இச் சிறுர்களை அழைப்பது (3) இந்த உபகரணங்களை பொருட்காட்சியாக அமைத்துச் சிறுர்களைப் பார்க்கச் செய்வது.

இக்காலத்தில் ஆசிரிய ஆசிரியைகளது வேலைச் சுமையை ஆராய்ந்தால், இவை யாவற்றையும் செய்வது எளிதன்று என்பது தோன்றும். எனினும் இதில் கட்டாயப்படுத்துவது ஒன்றுமில்லை ; முழுமனத்துடன் இயன்றவரையில் சிலவற்றைத் துவக்கிச் சிறிது சிறிதாகச் செய்யலாம் என்பதுதான் நாம் அறியவேண்டுவது. சிறுர்களது அறிவும் ஆற்றலும், ஆசிரிய ஆசிரியைகளது அறிவும் ஆற்றலும் அநுபவமும் வீணே போகாமல் சமூகத்திற்குத் தக்கவகையிலே பயன்படல் வேண்டும் என்ற குறிக்கோள் ஒன்றே இந்தத் திட்டத்தின் அடிப்படையாகும்.

முதல் ஐந்து வகுப்பு வரை இலக்கணம் கற்பித்தல்

(Sir C. Ekambarā Iyer, Tamil Pandit P. S. High Shcool)

முதல் வகுப்பில் சிறுவர்கள் எழுத்துக்கள் எழுதப் பழகும்போதே அவ்வெழுத்துக்கள் ஒன்றும், பலவும் கொண்ட சொற்கள் எழுதவும் படிக்கவும் கற்பிக்கப்படுவார்கள். இடையிடையே அவர்களோடு சம்பாஷிப்பதன் மூலம், இன்னதென்று சொல்லாமல் சிறுவாக்கியங்களால் பேசச் செய்யலாம். பின்னர் அவற்றை எழுதவும் செய்யலாம். வாக்கியங்களை எழுதி முடிக்கையில் புத்தகத்தில் முற்றுப்புள்ளி (.) இருப்பதைக் காட்டி அதைப் போல ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் அந்த முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தலாம்.

இரண்டாவது வகுப்பில் சாதாரணமான ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப்புள்ளி வைத்து வரும்படி சிறுவர்களை வற்புறுத்த வேண்டும். சில சமயங்களில் வாக்கியங்கள் கேள்வியாக இருக்கும். அதனைக் கேள்வியைத் தெரிவிக்க வினு அல்லது கேள்விக்குறி (?) போடவேண்டுமென்று வலியுறுத்தவும். உதாரணம்: கண்ணன் கை காட்டினன். கண்ணன் கையா காட்டினன் ?

மூன்ருவது வகுப்பில் சிறுவர்களுக்கு முற்றுப்புள்ளி, வினக்குறி இவற்றை ஞாபகப்படுத்தி மறக்காமல் வாக்கியங்களின் முடிவிலே போடும்படி கட்டாயப் படுத்தவும். உணர்ச்சிகள் தோன்றப் பின்வருமாறு எங்கும் பேசப்பட்டு வருவதை நினைவு கொள்ளச் செய்யவும். என்ன திமிர் உனக்கு (கோபம்), என்ன கஷ்டம் அவனுக்கு (வருத்தம்), நெருப்பு என்ன சுடுகை சுடுகிறது (பயம்) என்ன சந்தோஷம் (மகிழ்ச்சி). இவை கோபம், வருத்தம், பயம், மகிழ்ச்சி முதலிய பல உணர்ச்சிகளே மனத்தில் உண்டாக்குவன வாக இருக்கின்றன. ஆதலால் உணர்ச்சியைக் குறிக்க, வாக்கியங்களின் முடிவில் (!) வியப்புக்குறி என்கிற உணர்ச்சிக் குறியை எழுதிக் காட்டவேண்டும் என்று கூறுக. உதாரணம்: இவனுக்கா இவ்வளவு கஷ்டம் வரவேண்டும்! ஒன்றுக்குமேல் பல பொருள்கள் அல்லது சொற்கள் வரும்போது அவற்றைப் பிரித்துக் காட்ட (,) கால் புள்ளி இடுவார்கள் என்று கூறவும். கடைசியாக வரும் சொல்லேத் தவிர, முன்னே வரும் ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னும் கால்புள்ளியிட வேண்டும் என்று அவசியம்கூறவும். உதாரணம்: கந்தன் ஒரு ரூபாய்க்குக் கத்தரிக்காய், கீரைத் தண்டு, துவரம் பருப்பு வாங்கிவந்தான்.

நான்காவது வகுப்பில் சிறுவர்கள் முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, உணர்ச்சிக்குறி, கால் புள்ளி இட வேண்டிய இடங்களில் போடத் தவறலாகாது என்று நினைவூட்டவும். ஒரு எழுவாய்க்குப் பல பயனிலைகள் வரக் கூடும். அதனுல் சிறு சிறு வாக்கியங்களாக அவைகள் ஆகிவிடும். கடைசியாக முடியும் வாக்கியத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, மற்ற சிறு வாக்கியங்களுக்கு அரைப்புள்ளி (;) வைக்கவேண்டும் என்று சொல்லி எழுதச் செய்யவும். உதாரணம்: கோபாலன் வீட்டுக்குச் சென்ருன்; சோறு சாப்பிட்டான்; சொக்காய் அணிந்தான்; புத்தகம் பலகையை எடுத்துக் கொண்டான்; பள்ளிக்கூடம் புறப்பட்டான்.

ஐந்தாவது வகுப்பில் சிறுவர்கள், முதல் நான்கு வகுப்பு வரையில் சொல்லப்பட்ட நிறுத்துக்குறிகள் இட வேண்டிய இடங்களில் இடத் தவறலாகாது. மேலும் ஒருவர் மற்ருெருவரைக் கண்டு பேசும் பேச்சுக்களே மேற்கோள் (" ") குறிகளுக்கு இடையில் எழுதவேண்டும் என்று அவர்களுக்குக் கூற வேண்டியது. உதாரணம்: கோபாலன் தன் தம்பியை நோக்கி, "உன் புத்தகத்தை எங்கே வைத்தாய்?" என்று கேட்டான். சில இடங்களில் தொடர்ச்சியாகச் சில சொற்கள் விட்டுப் போனுல் அவற்றை அடைப்புக் குறிகளாகிய ( ) பிறைக்குறிகளுக்கு இடையே எழுதவேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்தவும். உதரரணம்: கண்ணன் (வீமனேப் பார்த்து) "உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது" என்ருன்.

பிற நிறுத்துக் குறிகளேப் பற்றிய விவரங்களேப் பிள்ளேகள் மேல் வகுப்புக்களில் அறிந்து கொள்வார்கள்.

சேரன் மகாதேவி ரேஞ்சு உதவிபெறும் ஆரம்பப் பாடசாலை

ஆசிரியர் யூனியன் 28-9-63 அன்று நடைபெற்ற கால் ஆண்டு மகாநாட்டுத் தீர்மானம்

1. ஆரம்பப் பள்ளிகளில் மாதாந்தரக் கணக்கு 21-ந் தேதி முதல் 20-ம் தேதி வரை என்று இருப்பதால் T. P. F. கணக்கு முதலியன வைப்பதில் சிரமங்களும் உள்ளன. ஆதலால் அதை மாற்றி காலண்டர் மாதத்தையே அனுசரிக்க உத்வரவிடுமாறு இம்மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

2. உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும் வகுப்புகளில் எத்தனைப் பிரிவுகள் உள்ளன என்பதைக் கவனியாமல் எல்லாக் கைத்தொழிலாசிரியர்களையும் முழு நேர ஊழியர்களாகக் கருதுமாறு வேண்டிக் கொள்கிறது.

3. ஆரம்பப் பள்ளிகளில் 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலப் பாட போதனை ஆரம்பமாகி விட்டபடியால் ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்க்கும் எல்லாச் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு சம்பளம் வழங்குமாறு தாழ்வுடன் கேட்டுக் கொள்கிறது.

4. ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை யாசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் படி வங்ழுகுமாறு கேட்டுக் கொள்கிறது.

5. ஆசிரியர்கள் பென்ஷன் தொகையை ரூபாய் முப்பதுக்குக் குறையாமல் வழங்குமாறு வேண்டிக் கொள்கிறது.

6. எல்லா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வைத்திய வசதி, வீட்டு வாடகை அலவன்ஸ் வழங்குமாறு வேண்டிக் கொள்கிறது.

7. ஆசிரியர்கள் பிராவிடெண்ட் நிதியிலிருந்து கடன் பெற விரும்பினால் எளிதில் கிடைக்க உதவும் வகையில் விதிகளில் வழி வகுக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

8. ஆரம்பப் பள்ளிகளில் தமிழ்ப் பாடத்திட்டம் சற்றுக்கடினமாக இருப்பதால் அவற்லிருந்து மாற்றியமைக்குமாறு வேண்டிக் கொள்கிறது.

9. உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குப் விஞ்ஞான பாடப் போதனைக்கு போதனைக் கருவிகள் வாங்க நிதி உதவியளிக்குமாறு கேட்டுக் கொள்கிறது.

10. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு விஞ்ஞான பாடப் போதனைகளில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்துமாறு வேண்டிக் கொள்கிறது.

11. பள்ளித்துணை ஆய்வாளர் தேர்விற்கும், சமூகக் கல்வி அமைப்பாளர் நியமனத்திற்கும் உதவிபெறும் பள்ளி யாசிரியர்களையும் எடுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறது,

12. ஆரம்பப்பள்ளி, செகண்டரிப் பள்ளி இவற்றிலிருந்து ஆசிரியர்கள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று மாறினு

லும் அவர்களுடைய ஊதியத்தையும், ஊழியகாலத்தையும் தொடர்ச்சியாகக் கணக்கிடுமாறு கேட்டுக் கொள்கிறது.

13. உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் பாட நேரத்தைக் கணக்கிடாமல் தமிழ் ஆசிரியர், தேகப்பயிற்சி ஆசிரியர் நியமிக்க அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

14. ஆரம்பப் பள்ளிக்கு வழங்கப்படும் நிர்வாகக் கிராண்டை 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தும்படி வேண்டிக் கொள்கிறது.

15. ஷ்டி நிர்வாகக் கிராண்டு கணக்கிடும்பொழுது நிர்வாகிகள் ஆசிரியர்களுக்காகக் கட்டும் T. P. F. உதவித் தொகையையும் செலவுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறது.

16. உயர்தர ஆரம்ப வகுப்புகள் மட்டும் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதத்தை அனுசரிக்காமல் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் வீதம் அனுமதிக்கும்படி வேண்டிக் கொள்கிறது.

செய்தித் திரட்டு

சென்னை மாநிலக் கல்வித் துறை இயக்குநர்க்கு வாலாஜாபாத்தில் ஒருநாள் வரவேற்பு

இயக்குநர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும் அவர் வீட்டரசியார் காந்தம்மாளும் 5-12-63 அன்று காலை வாலாஜாபாத்திற்கு வந்தனர். வாலாஜாபாத் கழக உயர்நிலைப் பள்ளியின் தேசீய மாணவர் படையின் கடற்படைப் பிரிவினர் அவரை அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்றனர். ஒழுங்கு முறைகள் இயக்குநரை மகிழ்வித்தன. வரவேற்புக் குழுவின் சார்பாக இந்துமத பாடசாலையைச் சேர்ந்த திரு. நா. ப. தணிகை அரசு அவர்களால் இயக்குநருக்கு நல் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது,

கலை நிகழ்ச்சிகள்

கல்வித் துறையில் நமது இயக்குநர் வகுத்துள்ள பல திட்டங்களையும் அவற்றால் உண்டாகும் நன்மைகளையும் எடுத்துக் கூறியபின் வில்லுப் பாட்டு முதலான பல கலை நிகழ்ச்சிகள் இந்துமத பாடசாலை மாணவர்களால் நடத்தப் பெற்றன.

ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் படத் திறப்பு விழா

வாலாஜாபாத் அரசினர் ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் சார்பில் ஜனாதிபதி அவர்கள் படத்தை இயக்குநர் திறந்துவைக்கையில் குடியரசுத் தலைவர் அவர்களின் உயர்ந்த கருத்துக்களில் சிலவற்றை எடுத்துக் காட்டி உலகம் முழுவதுமே ஒன்று சேர்ந்தால் தான் நன்கு வாழலாம் என்ற அவர் கொள்கையின் சிறப்பை விளக்கிப் பேசினார்

ஆளுக்கொரு நூல் நிலையத்திட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் மாணவர்களிற் சிலருக்கு நூல்களை இயக்குநர் வழங்கினர். ஒவ்வொருவரும் திருக்குறளையும், அண்ணல் காந்தியடிகளார் சுய வரலாற்றையும், தங்கள் தங்கள் தொழிலைப் பற்றிய சில நூல்களையும் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்று இயக்குநர் அறிவுறுத்தினர்.

ஞானத்தந்தை திட்டம்

பின்னர் ஞானத் தந்தை திட்டத்தின் அடிப்படைத் தத்துவத்தையும் அது செயல்படுவதனல் நமது நாட்டில் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் எல்லோருக்கும் கல்வித் தரம் உயர்ந்து நாடு அறிவிற் சிறக்குமென்பதை விளக்கினர். பல்வேறு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் உடன்பிறப்பு உணர்ச்சியோடு ஒருவரோடு ஒருவர் அளவளாவி, எல்லோரும் சேர்ந்து தங்களிடம் பயிலும் மாணவர்களின் உயர்வுக்குப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இலக்கிய மன்றம் தொடக்க விழா

அரசினர் மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் வாலாஜாபேட்டை, வாலாஜாபாத், காஞ்சீபுரம், பரங்கிமலை ஆகிய நான்கு இடங்களிலிருந்து ஏறத்தாழ 1000 மாணவியர் வந்திருந்தனர். அவைகளின் தணிக்கையாளர் திருமதி R. விசாலாட்சி அம்மாள் இயக்குநரை வரவேற்றபின் மாணவியரின் பட்டிமன்றமும், காவிய நிகழ்ச்சிகளின் நடிப்புப் போட்டியும், ஆங்கிலப் பாட்டுப் போட்டியும் நடைபெற்றன. நடுவர்கள் அறுவர் இருந்து போட்டி முடிவுகளை அங்கேயே அறிவித்தனர். இயக்குநர் பரிசு வழங்கியபின் ஆசிரியர்களுக்குப் பயன்படும் அரியதோர் விரிவுரை ஆற்றினர்.

மதிய உணவுத் திட்டம் துவக்கம்

பின்னர் அரசினர் மகளிர் உயர் நிலைப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத் துவக்க விழா நடைபெற்றது. சில மாணவியர்க்கு இயக்குநரும் அவர் தம் வீட்டரசியாரும் உணவு படைத்துத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்.

பின்னர் இயக்குநருக்கும் அவர்களுடன் விழாக்களில் கலந்து கொண்டவர்களுக்கும், வெளியூர்களிலிருந்து வந்த ஆசிரியர்கள் முன்னூறு பேருக்கும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் விருந்து அளிக்கப் பெற்றது.

மாலைக் கூட்டம்

பிற்பகல் 3 மணிக்கு வட செங்கற்பட்டு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர் திரு. T. அய்யம் பெருமாள் பிள்ளை தலைமையில் 400 ஆசிரியர்களைக் கொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஞானத் தந்தை திட்டத்தை விளக்கிக் கல்வித் தலைவர் பேசியபின் வாலாஜாபாத் இந்துமத பாடசாலை அப்பா திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் அண்ணு திரு. நா. ப. தணிகை அரசு அவர்களும் கழக உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. M. V. சுப்பிரமணியம் அவர்களும் வாழ்த்துரையும் துணைத் தணிக்கையாளர் திரு. வி. இராஜி அவர்கள் நன்றியும் கூற விழா இனிது நிறைவேறியது.

பாலர் கல்விக்கேற்ற துணைக் கருவிகள்

S. ஜகந்நாதன் - சைதாப்பேட்டை

குழந்தைகள் எவ்வாறு தமது அறிவைப் பெருக்கிக் கொள்கிருர்கள், குழந்தைகளுக்கு எவ்வாறு கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று பாலர் மனநூல் சாஸ்திரங்கள் கூறுகின்றன. தேகம், மனம், ஆத்மா மூன்றும் இணைக்கப்பட்ட கல்வியே சரியான கல்வி என்பார் பலர். தேக சௌக்கியம், கைகண் பயிற்சி, மனப் பயிற்சி, தருமநெறி இவை நான்கும் இணைக்கப்பட்ட கல்வியே சிறந்தது என்பாரும் உண்டு. விளையாட்டு முறை, ஐம்புலன் பயிற்சி முறை, நாடகமுறை, செயல்திட்ட முறை, வாழ்க்கைமூலம் கல்வி, பல பாடங்கள் இயல்பாக ஒன்று கூடி இணைக்கக் கூடியபடி அமைந்த கைத்தொழிற் கல்வி முறைகள் பல உள்ளன. அதன் பொருட்டே பள்ளிக்கூட அமைப்பும் விளையாட்டு, தோட்ட வேலை, சிறுவர் கைவேலை அல்லது தொழிற் பயிற்சி, கல்வி சம்பந்தமான உல்லாசப் பிரயாணம், புத்தகப் படிப்பு என்று பல கிளைகளாக்கப்பட்டும் ஒன்று கூடியும் இணைந்த ஒரு நற்கல்வியேயாகும். மாண்டிஸாரி முறையில் ஐம்புலன்களுக்கும் சரிவரப் பயிற்சி கொடுத்துக் கல்வி புகட்டுவதே இம்முறையின் விசேஷ அம்சம். நமது முன்னோர்களும் ஐம்புலன்கள் வழியாகத்தான் அறிவைப் பெருக்குகிறோம் என்று நன்கு கூறியிருக்கிருர்கள். ஆயினும் நாளடைவில் "ஐம்புலன் ஆசையை அடக்கு" என்றும் கூறியிருக்கிருர்கள். புலன் பயிற்சி முறையில் பற்பல உருவக் க்கட்டைகள், உருளைகள் மணிகள், பலகை உருவங்கள், வர்ணப் பட்டைகள், சிறு பெட்டிகள், டப்பிகள் போன்ற பலவகைச் சாதனங்கள் உண்டு. கிண்டர் கார்டன் முறையிலும் பிரத்தியேகமான கட்டைகள், வர்ணப் பந்துகள், பல உருவ அட்டைத் துண்டுகள், வளையங்கள், குச்சி, கோடு வரைந்த பலகைகள் போன்ற பல சாதனங்கள் உண்டு. ஆதாரக்கல்வி முறையில் போதுமான இடவசதி, உபகரண வசதி, கைத்தொழில் கற்க வசதி, தோட்ட வேலை வசதி, புத்தகசாலை வசதி போன்ற சூழ்நிலை எல்லாம் அபரிமிதமாகத் தேவைப்படுகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். அதைப்பற்றின அபிப்பிராயங்களைக் கேட்டு வருகிறோம். நமது கல்விச் சாலைகள் ஆறு, குளம், கோயில், இயற்கை எழில் மிகுந்த க்ஷேத்திரங்கள் போல் விளங்க வேண்டும் என்று ரவீந்தரநாத் தாகூர் கருதுகிருர். அதாவது கல்விச் சாலைகள் தேக சுத்தம், தேகசௌக்கியம், தெய்வ பக்தி, மனநிம்மதி இயற்கையன்னையைப்பற்றின பூர்ண அறிவு, ஊக்கமுடைமைக்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும் என்பதே கருத்து. கிராமப் பாடசாலை ஒவ்வொன்றும் சமூக முதியோர் கல்விக்கும் உகந்ததாக அமைய வேண்டும் என்பதேயாகும்.

ஒரு பொருளே ஒரு வார்த்தையைத் தெரிவிக்கிறது. ஒரு செய்கையைக் கவனிப்பதாலேயே அதைப்போல் செய்ய வேண்டும் என்ற அறிவும் ஆற்றலும் உண்டாகின்றன. அதைப்

பற்றின பாஷையும் வளர்ந்து வருகிறது. நேரில் பார்க்கிற அனுபவம், சோதனை செய்து பார்க்கிற இளம் பருவ அனுபவம், இந்தச் சுய அனுபவ அறிவுதான் பசுமரத்தாணி போல் நன்கு பதியும் அறிவாகும். இயற்கையன்னையின் நன்கொடை என்று கூறும்படியான இயற்கைச் சூழ்நிலையும் அதற்கேற்பச் செயற்கைச் சூழ்நிலையும் பாலர் கல்விக்கு இன்றியமையாதவை. கேள்வி ஞானமும் வேண்டியதே. வகுப்பிலேயே கற்கும்படியான பாஷை, கனிதம், தேசசரித்திரம், பூகோளம், கதை, அரசாங்க முறை, இயற்கைச் சாஸ்திரப் பாடங்கள் இவற்றைப் போதிக்கவும் ஏற்ற பயிற்சி கொடுக்கவும் துணைக்கருவிகள் தேவையாயிருக்கின்றன. ஒரே காரியத்தைத் திரும்பத் திரும்ப அதேமாதிரி செய்வதில் அலுப்புச் சலிப்பு ஏற்படுவது சகஜம். அலுப்பைப் போக்குவதற்கேற்பப் பலவித சாதன அமைப்புகளும் இன்றியமையாதவை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. வெறுங்கை முழம் போடாது. பிறவிக் குருடனுக்குப் பால் எப்படியிருக்கும் என்று வர்ணித்தவர் கதை நமக்குத் தெரியும். பள்ளிக்கூடம் சிறுவர்களுக்கு ஒரு சிறு உலகம் போல் அமைய வேண்டும் என்பது பெரியோர் கருத்து. நூதன முறையில் நடைபெறும் பாலர் கல்வி நிலையங்களைப் பார்ப்போமானால் நமது உள்ளம் நன்கு தெளிவடையும். இயற்கைச் சூழ்நிலையும் அதற்கேற்பப் பொருத்தமான செயற்கைச் சூழ்நிலையும் சேர்ந்து இப்பாலர் பூங்கா பரிமளிக்க வேண்டியிருக்கிறது. ஆங்காங்குப் பாலர் கல்விக்குத் தேவையான உபகரணங்கள் கிடைக்கின்றன. ஒருக்கால் க்காக அதிகம் இருக்கக்கூடும். விலையாது லக்ஷியத்தைப் புறக்கணிக்க முடியாது நமது ஊரிலேயே நமது தச்சர், தகர. வேலைக்காரர், ஓவியக்காரர், வர்ணம் தீட்டுவோர், தையற்காரர், கொல்லர், குயவர் போன்ற பல தொழிலாளர்களைக் கொண்டு தேவையான சாதனங்களைச் செய்து கொள்ளக் கூடும் என்பது எனது மனமார்ந்த கருத்து. பாலர் கல்வி, சமூகக்கல்வி, சமூகநலன் இவை ஒன்று கூடியே பெருகிவரும் வாய்ப்பு ஏற்படும் அல்லவா? ஐக்கிய இந்தியா என்ற தலைப்பின் கீழும் நாம் சரித்திர சம்பந்தமான பூகோள சம்பந்தமான பலகை தேசப்படங்கள், படக்காட்சி, பொருள்காட்சி சாதனங்களைக் கொண்டும் இன்று ஏகோபித்த விஷயத்தைப் பற்றிக் குழந்தைகள் மனதில் நன்கு பதியச் செய்யக் கூடும்.

பாலர் பயிற்சிப் பழக்கம் கல்வி போதனு உபகரணங்கள்

குழந்தைகள் சுயமாகவும் திட்டமிட்டும் விளையாடும் விளையாட்டுகள் எல்லாம் படிப்படியாக உயர்த்து விருத்தியடைவதானது நமது வாழ்க்கையைப் படம் பிடித்துத் தருதல் போல் இருக்கவேண்டும். குழந்தைகள் ஐந்து வயதிற்குள் உலக வாழ்க்கை நாடகத்தையே தமது விளையாட்டுக்களில் நடத்திக் காட்டுகிறார்கள் என்பது நான் கண்டறிந்த அனுபவம். விளையாட்டுக் கருவிகளும் போதனு உபகரணங்களும் சேகரிக்க வேண்டியதில் கவனிக்கக் கூடிய விஷயங்கள் :-

1. இயற்கையன்னையின் நன்கொடையைப் பூர்ணமாக உபயோகித்தல்.

2. வீட்டுப் பண்டம், பாத்திரம், இவைகள் சிறுவர்களுக்கு உகந்த வகையில் அமைவது.

3. பாலர் கல்விக்கென்றே தயாரிக்கப்பட்டவை. குழந்தைகளின் பற்பல ஆசைகளை இவ்விளையாட்டுகள் ஒன்றையும் விடாமலும் மிகைப்படுத்தாமலும் நிறைவேற்ற ஒரு சீரான வழியைப் பின்பற்றக் கூடியவையாகவும் இருத்தல்.

4. "எல்லாம் ஒன்றிலிருந்தே தோன்றுகின்றன. அந்த ஒன்றினுள்ளே அடங்குகின்றன". உதாரணமாக மூங்கில் சிம்பில் பின்னப்படும் முறங்கள். சல்லடைகள், கூடைகள், துத்துநாகத் தகட்டில் முறங்கற், மூடியில்லாப் பெட்டிகள் அதேபோலப் பித்தளையிலும் பல அடுக்குகள். பெரியது ஒன்றில் சிறியவைகள் பல அடுக்கு அடுக்காகப் பொருந்த வைக்கப்பட்டிருக்கிறதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு இனத்தில் 10 உருப்படிகள் இருக்கக்கூடும். ஒன்று பலபாகங்களாகப் பிரிபடுகிறது. பிரிந்தபாகங்கள் ஒன்றுகூடி ஒன்ருகின்றன. இவ்வுண்மையை விளக்கப் பல சாதனங்கள் தேவை.

5. மற்றும் பல்வேறு முறைகள் கிண்டர்கார்டன் முறை மாண்டிஸோரி முறை நர்ஸரி பிராஜெக்ட் முறை இவைகள் சம்பந்தமான துணைக் கருவிகளையும் தேவைக்குத் தகுந்தபடி மாற்றியமைப்பதும் உபயோகமாயிருக்கும்.

சின்ன மனூர்
2-9-63

சின்னமனூர் ஆசிரிய மன்றங்களின் சார்பில் சிறப்புக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு இவ்வூர்ப் புகழ்கிரி டாக்கீசில் பெரிய குளம் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். மலைச்சாமி பி.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி ஞானம்பாள் இறைவணக்கம் பாடினுர்கள். இச்சரகக் கல்வி ஆய்வாளர், திரு வீ. சோமையா அவர்கள் வரவேற்புரை வழங்கினுர். தலைவர் அவர்கள் தங்கள் கடமை தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள குழந்தைகளது எதிர்கால நலன்கள் செயல்படுவதுடன் மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் நடைபெற ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறியதுடன், அவ்வாறு நன்கு நடைபெறப் பள்ளிக்கு ஒரு ரோலிங்கப் வாங்கி வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் சொல்லி அதனை நன் முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்கொண்டிக்டார். பிறகு, இந்த யூனியன் கமிஷனர், திரு ஜான் ஆசீர்வாதம் பி.ஏ., அவர்கள் ஆசிரியர்கள் தங்கள் பணியை நன்கு செய்து, ஊர் மக்களிடம் நன்மதிப்புப் பெறுவதுடன் அரசியலில் பங்குகொள்ளாது தொண்டுள்ளம் கொண்டுழைக்குமாறு கேட்டுக் கொண்டார். அடுத்து மாவட்டக் கல்வி அதிகாரி திரு S. பேரின்பமுத்து பி ஏ.எம் இடி அவர்கள் ஆசிரியர் தமது அறிவை விருத்திசெய்து கொள்வது பற்றியும் குழந்தைகளுக்கு நல்லறிவுபுகட்டிக் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டிய நிலைபற்றியும் பேசினுர்கள். ஆசிரிய மன்றச் செயலாளர். திரு ஜீ. வி. சுப்பிரமணியன் நன்றி நவிது நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனில முடிவுற்றது.

பாலர் வகுப்பு

ஜகந்நாதன், சைதாப்பேட்டை

கட்டுதல், கை வேலை, புலன் பயிற்சி விளையாட்டுகள் இவைகளுக்கேற்ற உபகரணங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் சென்று 'குழந்தைகள் ராஜ்யம்' எங்கே என்று தேடுவோமாளுல், ஆரம்பப் பள்ளிக்கூட முதல் வகுப்பே குழந்தைகள் ராஜ்யமாகப் புலப்படும். அந்த ராஜ்யத்தில் குழந்தைகள் தனித் தனியாகவும் ஒன்று கூடியும் தமது சுயச் சக்தியை வெளிக் காட்டி சுய முயற்சியால் சுய அனுபவத்தைப் பெற சில சாதனங்கள், உபகரணங்கள் இன்றியமையாதவை. அவை பின் வருமாறு.

1. கோபுரக்கட்டைகள்-முதல் ஏழும் ஒவ்வொன்றும் பத்து மாடம் உள்ளவை.
2. கோபுரக்கட்டைகள்-முதல் ஐந்து கோபுரங்களும் முறையே ஐந்து நிறங்களில் உள்ளவை, ஐந்தில் ஒன்று பெரியது மற்ற நான்கும் சிறியவை ஆயினும் ஒரே அளவு உள்ளவை.
3. கோபுரக் கட்டைகள் – கோபுரத்தைச் சுற்றி மதில்.
4. கோபுரக் கட்டைகள் - சுவர்க் கட்டைகளும் உண்டு.
5. கோபுரக் கட்டைகள் - சுவர்க் கட்டைகளும் உண்டு.
6. கோபுரக் கட்டைகள் - வட்ட வடிவம்.
7. சில்லுக் கோபுரம் - 10 அடுக்கு.
8. மாடிப்படி.
9. நீண்ட மாடிப்படி. செங்குத்து மாடிப்படி - 10 அடுக்கு.
10. மூடியில்லாப் பெட்டி - 10 ஒன்றினுள் ஒன்று அடங்கக் கூடியவை.
11. தகர டம்ளர்கள் - 10 ஒன்றினுள் ஒன்று அடங்கக் கூடியவை.
12, இரும்பு வளையங்கள் 10 ஒன்றினுள் ஒன்று அடங்கக் கூடியவை.
13. வஸ்துக்களின் உருவங்கள் - 15 ஒட்டுப்பலகை.
14. ஜியோமெட்ரி உருவங்கள் 16 ஒட்டுப்பலகை.
15. சதுரம்
16. வட்டம்
17. நீண்ட சதுரம்
18. முக்கோணம்

ஒவ்வொன்றிலும் பத்து உருப்படிகள் பெரியதிலிருந்து, சிறியது வரையிலும் ஒவ்வொன்றின் மீது ஒன்றாக - ஒட்டுப் பலகையில் செய்து கொள்க.

19. கிணறு கட்டும் கட்டைகள் (கால் வட்டத் துண்டுகள் 40).
20. கோயில் மண்டபம் தேர்ப் பீடம், கால் அடுக்கும்படி தனித்தனியாக.
21. கோயில் மண்டபம் - பீடம் தூண்கள் விமானம், (தனித் தனியாக.
22. வீடுகட்டும் கற்கள் - களிமண்ணினால் செய்து சுடப்பட்ட பல வடிவங்கள் – ஒவ்வொரு இனத்திலும் 25 கற்கள்.
23. குளம் வட்டம் ஒட்டுப்பலகை.
24. குளம் சதுரம் ஒட்டுப்பலகை.
25. கோலம் அமைத்தல் ஷ வெண் தாமரை. செந்தாமரை இதழ்.
26. கோலம் அமைத்தல் ஷ முக்கோணம், டைமன், அறுகோண வடிவங்கள்.
27. பின்ன விளக்கக் கட்டைகள் (வட்டப் பலகையைத் துண்டாகப் போட்டவை.
28. பின்ன விளக்கக் கட்டைகள் (உருண்டையைச் சுளைபோன்ற துண்டாகப் போட்டவை).
29. மணிகள் - கம்பிகள் - மணிகள் வைக்கும் கிண்ணங்கள்.
30. வர்ண நாடாக்கள் – நாடா பின்னும் சட்டங்கள்.
31. கொருக்கைக் கட்டைத் துண்டுகள் - 2 அங்குலம் நீளம் கெட்டி நூல் அல்லது மெல்லிய நாடாக்கள்.
32. ஈர்க்குச்சி - நுணுக்காய், தென்னங்குரும்பை, கோவைக்காய், வேப்பம் ஆர்க்கு, தூங்குமூஞ்சி இலை, வர்ணப் புஷ்பங்கள், சோழிகள் சிறியவை, பெரியவை மற்றும் கிடைக்கும்படியான இலை, காய், கனி, பூ, விதை முதலியன.

எகோ (ECHO)

(சென்னை Education Echo அக்டோபர் வெளியீடு)

WCOTP-இன் அங்கச்சங்கங்களின் மகாநாடுகள்

FIPESO : ஸ்காட்லாண்டு தேசத்தில் உள்ள 'எடின்பரோ' நகரில் ஜூலை 24–27–இல் FIPESO–இன் (The Internationel Federation of Secondary Teachers) முப்பத்துமூன்றும் காங்கிரஸ் நடைபெற்றது. 'ஸெகண்டரி' ஆசிரியர்களைப் புதிதாக நியமித்தல் என்னும் விஷயம் அக் காங்கிரஸில் ஆராயப்பெற்றது. அதன் முழுவறிக்கை WCOTP பிரதிநிதிகள் மகாநாட்டில் செகரடெரி-ஜெனரல் A. W. S. ஹச்சிங்ஸ் என்பவரால் ஸமர்ப்பிக்கப்பட்டது.

அச் சங்கத்தின் தலைவராக–இரண்டாண்டுக்காலத்துக்கு—Dr. ரெயின் ஹார்ட் (ஸ்விட்ஸர்லாண்டு) மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. எமிலி காம்போர்கர் (ஃப்ரான்சு) என்பவர் முன்னாள்தலைவராதலின், நிர்வாகக்கமிட்டியில் தொடர்ந்து தொண்டாற்றுவார்.

பதினாறு நாடுகளில் உள்ள இருபத்துநான்கு தேசீய சங்கங்களிலிருந்து 85 பிரதிநிதிகளும் அங்கத்தினர்களும் அக் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்தனர்.

1963–ஆம் ஆண்டிற்குரிய விஷயமான 'ஆசிரியர்களைப் புதிதாக நியமித்தல்' – என்பதோடு தொடர்புள்ள பின்வரும் சிபாரிசுகள் தீர்மானிக்கப்பெற்றன : (1) அரசாங்கங்கள் ஆசிரியத்துறைக்கு வேண்டிய பொருளுதவியை அளிப்பதற்குத் தங்கள் அரசாங்கச்செலவில் முதலிடம் அளித்தல் வேண்டும். (2) ஆசிரியர்களின் நிலையை உயர்த்த, அரசாங்கங்களும் ஆசிரியர்சங்கங்களும் மும்முரமாக முயற்சிசெய்தல் யேண்டும். (3) தகுதியும் ஆற்றலும் பெற்ற ஆண்களும் பெண்களும் இவ்வாசிரியத் தொழிலை விரும்பி மேற்கொள்ளும் முறையில், ஆசிரியர்களின் ஊதியம், தொண்டின் நிலை, முன்னேறுதற்குறிய வாய்ப்புக்கள், 'பென்ஷன்' முதலியவை நன்கு வரையறுக்கப்படுதல் வேண்டும். (4) தகுதிபெற்ற ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாதவர்கள் என்பதனை யாவரும் அறியச்செய்தல் வேண்டும். (5) இன்றியமையாத ஆரம்பத்தகுதிகளைப் பெற்று மேற்கல்வியைப் பெறுதற்கு விரும்பும் மாணாக்கரனைவருக்கும் மேற்கல்வியளிக்கும் கல்விநிலையங்களில் இடம் அளித்தல் வேண்டும். (6) மாணாக்கர் மேற்படிப்பைப் பெறப் பொருளில்லையே என்று ஏக்கமுறாதவாறு, அவர்களுக்கு உபகாரச்சம்பளமும் மானியமும் அளித்தல் வேண்டும். (7) ஆசிரியர்கள் தங்கள் பொதுவறிவைப் பெருக்கிக்கொள்ளவும், பாடங்களிலும் கற்பிக்கும் முறைகளிலும் தற்காலமுறைகளை மேற்கொள்ளுமாறு செய்தற்கும் வேண்டிய வகுப்புக்கள் நடத்தப்பெறுதல் வேண்டும். (8) மணமான பெண்டிரும் இத் தொழிலில் ஈடுபடுமாறு தொழில்நிபந்தனைகள் வகுக்கப்படுதல் வேண்டும். (9) ஆசிரியர்கள் தம் கற்பிக்கும் பணியில் கருத்தையும் காலத்தையும் நன்கு செலவிடு-

வதற்கு உதவியாக, குமாஸ்தாக்களும் விஞ்ஞானச்சோதனைச்சாலை உதவியாளரும் நியமிக்கப்படுதல் வேண்டும். (10) ஆசிரியர்கள் தங்கள் பணியைத் திறம்படச் செய்தற்கு ஏற்றவாறு பெயரளவில் புத்தகங்களும், கண்டுகேட்டதற்குரிய கருவிகளும், பிறவும் அளிக்கப்படுதல் வேண்டும். (11) கல்விமுறைகள் வகுக்கப்பட்டு முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் 'வியட்-நாம்' போன்ற நாடுகளில் ஸர்வதேச சங்கங்கள் கல்வி-நிலையங்கள் முதலியவற்றின் உதவியைக்கொண்டு சிறப்பான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

IFTA : IFTA-இன் (International Federation of Association) 32-ஆம் ஸர்வதேச மகாநாட்டில், ஆசிரியர்களைப் புதிதாகச் சேர்த்தலைப்-பற்றியும் புதிதாக விடுதலைபெற்ற நாடுகளோடு பண்பாடு முதலியவற்றில் தீவிர ஒத்துழைப்புக்கு வேண்டியவற்றைச் செய்தல் என்பதைப்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

ஸ்காட்லாந்து நாட்டில் எடின்பரோ நகரில் ஜூலை 24-28-இல் நடைபெற்ற IFTA-மகாநாட்டின் நிகழ்ச்சியைப்பற்றிய அறிக்கை திரு. R. மைக்கேல் (IFTA-செகரடெரி-ஜெனரல்) என்பவரால், WCOTP 'ரியோ' மகாநாட்டில் ஸமர்ப்பிக்கப்பட்டது. இருபத்தொன்று தேசீயச்-சங்கங்களின் பிரதிநிதிகளாக ஏறத்தாழ ஒருநூற்றுவர் அக்கூட்டத்துக்கு விஜயஞ்செய்திருந்தனர். அக் கூட்டங்களின் பகுதிகள் FIPESO-ஒடு சேர்ந்து நடைபெற்றன.

"ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்கும் விஷயம், காரணங்கள், பரிகாரங்கள்"—என்னும் பொருளைப்பற்றித் தொடர்ந்துசெய்த ஆராய்ச்சி-யில், IFTA மகாநாடு, ஆசிரியர்களைப் புதிதாக நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் காலதாமதம் இன்றி அரசாங்கங்கள் எடுத்துக்கொள்ளு-தல் வேண்டும் என்பதனை வற்புறுத்துவதற்குப் பொருத்தமான செயல்-களைச் செய்தல்வேண்டும் என்று அங்கத்தினர்களை வேண்டிக்கொண்டது.

"இரண்டாவது திட்டம், புதிதாக விடுதலைபெற்ற நாடுகளோடு தீவிரமாகப் பண்பாட்டுத்தொழிற்றுறைகளில் ஒத்துழைப்பினைப்பற்றியது. இது நம் சங்கத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான திருப்பம். கஷ்ட-மான நிலைக்கு ஆளாகிய அந் நண்பர்களோடு நமக்கு உள்ள ஒற்றுமையை வெளிப்படுத்த IFTA விரும்புகின்றது" என்று திரு. மைக்கேல் அறிக்கையில் குறிப்பிட்டார்.

கிளைச்சங்கங்கள் பண்பாட்டுஒத்துழைப்பின் உடனடி முக்கியத்துவத்தைத் தம்தம் நாட்டுமக்கள் நன்கு உணர்தற்கும், தம்தம் அரசாங்கங்கள் ஸர்வதேச பரஸ்பர உதவியைச் செய்யுங் கொள்கையை வளர்த்தற்கும் ஆவன செய்தல்வேண்டும் என்னுந் தீர்மானம் அம் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், கிளைச்சங்கங்கள், முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளிலும் முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளி-லும் உள்ள ஆசிரியர்களும் அங்கத்தினர்களும் மகாநாடுகளைக் கூட்டி, தங்களுக்கிடையே ஒத்துழைப்பை வளர்க்கத் தம்மால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்தல் வேண்டும் என்று அம் மகாநாடு வேண்டிக்-கொண்டது.

IFTA மகாநாடு, 'இஸ்ரேல் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஷாலம் லெவின் என்பாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து IFTA-இன் **1963-64** நிர்வாகக்குழு, இங்கிலாந்து (NUT), ∴பிரான்ஸ் (SNT), ஜர்மனி (AGDL) நார்வே (NL) ஸ்விட்சர்லாந்து (SPR), ஃப்ரான்ஸ் (SNPEN), வியத்-நாம் (GATVN) என்னுஞ் சங்கங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதியொருவரைக் கொண்டிருக்கும்.

WCOTP—மகாநாட்டுத்தீர்மானங்கள்

பன்னிரண்டாம் WCOTP-பிரதிநிதிகளின் மகாநாட்டில் முதல்தரப்-போதனுமுறைக்கு வேண்டிய தொழில்நிலைகளைப்பற்றிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அது கல்வி, பொருளியல் ஆசிரியத்தொழில், சமூகம் இவற்றின் இன்றியமையாத நிலைமைகளைப்பற்றிய நால்வகைப்பகுதியை உடையது. முதல்தரப்போதனுமுறைக்கு இன்றியமையாத நிலைமைகளைப்பற்றி எழுந்த மும்முர விவாதங்களை அடிப்படையாகக் கொண்ட கழக-நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிக்கைகள் ஸமர்ப்பிக்கப்பட்ட பிறகு, இத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

I. (A) அவ்விஷயத்தைப்பற்றிய தீர்மானத்தில் கல்வி நிலைகள் பின்வருமாறு:-(1) ஒவ்வொரு குழந்தையின் உடல், மனம், உயிர் இவற்றின் சக்திகளை வளர்த்தல், கற்பனைமனமும் ஆராய்ந்து முடிவு காணுந் திறமை-யும் உள்ளவர்களைப் படைத்தல், சர்வதேச ஒற்றுமைமனப்பான்மையையும் மனிதசகோதரத்துவத்தையும் வளர்த்தல்—ஆகியவையே ஆசிரியரின் தலையாய பணியாய் இருத்தல் வேண்டும். (2) ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும் முறைகள் தற்காலத்துக்கு ஏற்றனவாய் அமைந்திருத்தல் வேண்டும். (3) ஆசிரியரின் பொதுவறிவு, தொழிலறிவு இவற்றில் பயிற்சியளித்தற்கு உரிய காலம், அவருக்குப் பணியின்கண் உள்ள பொறுப்புக்களின் தன்மையையும் காலவரையறையையும் பொறுத்தது. அது தனிச் சிறப்புள்ள கல்வித்துறைகளாலோ பல்கலைக்கழகங்களாலோ 'ஸெகண்டரி' பள்ளிகளினும் உயர்ந்த நிலையிலுள்ள கல்விநிலையங்களாலோ நடத்தப்-படுதல் வேண்டும்.

B. அத் தீர்மானத்தின் பொருளியல்நிலையைப்பற்றியவை: (1) ஆசிரியர்க்கு அளிக்கப்படும் ஊதியம் அத் தொழிலுக்கு அளிக்கப்பட வேண்டிய உயர்மதிப்புக்கும் பொறுப்புக்களுக்கும் ஏற்றவாறு உயர்வாக இருத்தல் வேண்டும்; தகுதிபெற்ற இளைஞரை (ஆண்களும், பெண்களும்) இத் தொழிலைத் தம் வாழ்க்கைத்தொழிலாக மேற்கொள்ளத்தக்க கவர்ச்சியை உடையதாய் இருத்தல்வேண்டும்.

(2) ஆசிரியர்கள் தம் தொழில் நீடித்துநிற்கும் என்னும் உணர்ச்சி-யைப் பெறுதல் வேண்டும்; வயதாகி ஓய்வுபெறுங்காலத்தில் 'பென்ஷன்' முதலிய பொருளுதவியைப் பெறுதல்வேண்டும்.

(3) நாட்டின் தேசீயவருவாயிலிருந்து கல்வித்துறைக்குப் பயன்-படுத்துந் தொகை, நாட்டின் கல்விநிலையைத் தொடர்ந்து போதிய வகையில் முன்னேற்றுதற்கு இன்றியமையாத வசதிகளை அளிக்கத்தக்கதாய் இருத்தல்வேண்டும்.

C. அத் தீர்மானத்தில் முதல்தர ஆசிரியர்க்கு வேண்டிய தொழில்நிலைகள் வருமாறு: (1) ஆசிரியர்களும் ஆசிரியர்சங்கங்களும் தங்கள் தொழில்துறைகளில் உயர்ந்த நிலையில் உறுதியாய் நிற்றல் வேண்டும்.

(2) கல்விக்கொள்கையையும் திட்டத்தையும் வகுத்தற்கு உரிய சங்கத்தில் கலந்துகொள்ளுதற்கு, அங்கத்தினர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் முழுவுரிமைகளை அளித்தல்வேண்டும் என்னும் உண்மையை அரசாங்கங்கள் உணரும்வரை ஆசிரியர்சங்கங்கள் வற்புறுத்திக்கூறுதல் வேண்டும்.

(3) தொழிலுரிமை, ஆசிரியர்களின்.மனவுரிமையும் தொழில்கௌரவமும் பாதுகாக்கப்படும் என்பதனை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்; அன்றியும், ஆசிரியர்கள் தம் தொழிற்சங்கங்களில் அங்கத்தினராதற்கு உரிமை அளித்தல் வேண்டும்; அரசாங்கம் ஆசிரியர்சங்கங்களை மதித்து ஆதரித்தல் வேண்டும்.

(4) இவ்வாசிரியத்தொழிலுக்கு முதல்தர ஆசிரியர்களை இழுக்குங் கவர்ச்சியை உண்டாக்கும் பொறுப்பு ஆசிரியர்சங்கங்களையும் அரசாங்கங்களையும் சார்ந்தது. காலசூழ்நிலைகளை ஒட்டி இத் தொழிலுக்கு வருவோர்க்குக் குறைந்தபட்சம் அமையவேண்டிய தகுதிகள் இவை என்று வரையறுத்துக் கூறுதற்கு உரிய பொறுப்பு ஆசிரியர்சங்கங்களைச் சார்ந்ததாக இருத்தல்வேண்டும். அவ்வாறு வருவோர்க்குத் கற்பிக்குந் தொழிலில் ஆர்வமும் தகுதியும் உளவா என்று உறுதிசெய்துகொள்ளுதற்கு மேற்கொள்ள வேண்டிய தேர்ந்தெடுக்கும் முறைகளையும் கையாளுதற்கு உரிய உரிமையை அச் சங்கங்களுக்கு அளித்தல் வேண்டும். தகுதியில் குறைந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படின், நியமிக்கும் அதிகாரிகள், அவர்கள் இன்றியமையாத தகுதிகளை அடைதற்குரிய எல்லா வாய்ப்புக்களையும் அமைத்துக் கொடுத்தல்வேண்டும்.

D. அத் தீர்மானத்தின் இறுதிப்பகுதி சமூகநிலைகளைப்பற்றியது: குழந்தைகள் கல்வியின் முழுப்பயனையும் அடைதற்கு உதவுமாறு இருத்தல் வேண்டிய சமூகநிலைகளைச் சிறப்பாகக் குறிக்கின்றது. இக் குறிக்கோளை அடைய அத் தீர்மானம் செய்யுஞ் சிபாரிசுகள் வருமாறு:—

(1) பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான இடம், கல்விக்குரிய கருவிகள், விளையாடுமிடம், அழகிய தூய சூழ்நிலை, மிக்கஅளவு கல்விப்பயனை அடைதற்குக் தக்க வகுப்பு, மாணாக்கர் தொகை, இவற்றைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்சங்கங்களைச் சார்ந்தது.

(2) பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களோடும், நகர கிராம பரிபாலன சங்கங்கள் தேசீயசங்கங்கள் முதலியவற்றோடும் ஒத்துழைத்தல் வேண்டும். ஆசிரியர் குடியிருந்து பணியாற்றும் இடத்திலுள்ள சமூகநிலைகளை உயர்த்துவதற்கு அவை உதவிசெய்யும். நாட்டைப் பரிபாலிக்கும் பொறுப்பினை ஏற்று நடத்தும் அதிகாரிகளின் மனத்தில், தனிமனிதனும் சமூகமும் தேசமும் வளர்ந்து முன்னேறுதற்கு இன்றியமையாத பொருள்-

களுள் கல்விகற்பித்தலும் ஒன்று என்னும் உணர்ச்சி ஏற்படுமாறு செய்தற்கு, அச் சங்கங்கள் பொதுமக்கள்மனத்தில் இக் கல்வியைப்பற்றிய அக்கறையை உண்டாக்குதல் வேண்டும்.

II. இரண்டாவது தீர்மானம்: நான்கு பகுதிகளோடுகூடிய முதல்-தீர்மானத்தை, WCOTP-யின் கிளைச்சங்கங்கள், தேசீய அரசாங்கங்கள், ஸர்வதேசஸ்தாபனங்கள் முதலியவற்றின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். அக் குறிக்கோள்களை அடைதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவைகள் செய்தல்வேண்டும் என்று வற்புறுத்தல் வேண்டும்.

III. மூன்ருவது தீர்மானம்: ஆசிரியர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சி-யாளர் முதலியோருக்குப் பயன்படும்படி, உலகத்தின் பல்வேறு பகுதி-களில் பயன்படுத்தப்படுகின்ற சிறந்த பாடப்புத்தகங்களைச் சேர்த்துத் தொகுத்துவைத்தற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும் என்று WCOTP நிர்வாகக்குழுவினை வேண்டிக்கொள்கின்றது.

IV. நான்காவது தீர்மானம்: பசிப்பிணியைப் போக்கும் இயக்கத்திற்கு WCOTP தன்னுலான உதவியைச் செய்யும் என்று ஐ. நா.-வைச் சேர்ந்த FAO-க்கு உறுதிமொழியளிக்கின்றது.

(1) தேசீய இயக்கக்கமிட்டி ஆற்றும் பணிகளில் கலந்துகொள்ளல் வேண்டும் என்றும், கல்வியைக்குறித்த உதவிக்கமிஷன்களை நிறுவுதல் வேண்டும் என்றும் WCOTP-யின் கிளைச்சங்கங்களை வேண்டிக்-கொள்கின்றது.

(2) உலகவமைதியை வளர்க்கும் 'கவுன்ஸி'லால் தயாரிக்கப்பட்ட பாடங்களுக்கு வேண்டிய போதனு உபகரணங்களைத் தங்கள் சஞ்சிகை-களிலோ வெளியீடுகளிலோ வெளியிடுதல் வேண்டும் என்று கிளைச்சங்கங்களை வேண்டிக்கொள்கின்றது. அவ்வாறு செய்யின், அப் பாடங்கள் எல்லாப்பள்ளிகளிலும் கற்பிக்கப்படும்.

(3) தொழில்பண்பாட்டு ஒத்துழைப்புக்கு (முக்கியமாக விவசாய முன்னேற்றத்துறையில்) வேண்டிய தலைவர்களைப் பயிற்றுவிக்கவேண்டிய ஆவசியகத்தை வற்புறுத்திக் கூறுகின்றது.

(4) மிக உயர்ந்த தரத்தையுடைய கிராமக்கல்வியின் முக்கியத்-துவத்தையும், பசிப்பிணியை அகற்றுவதில் துணைசெய்ய முதியோர்-கல்விப்பகுதியில் நல்லதொரு முன்னேற்றத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்திக் கூறுகின்றது.

V. அம் மகாநாட்டின் ஐந்தாவது தீர்மானம் அம்மகாநாடு சிறப்புற நடைபெற்று வெற்றியோடு முடிதற்கு வேண்டிய உதவியைச் செய்த அனைவர்க்கும் தம் பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கின்றது.



ரியோ நகரில் நடைபெற்ற WCOTP-யின் பன்னிரண்டாம் பிரதிநிதிகள் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பிய ஆசிரியர்சங்கங்கள் உள்ள நாடுகள்.

தனிச்சிறப்பு மகாநாடுகள்

போதனைமுறைக்கல்வி

'ரியோ' நகரில் ஆகஸ்டு 14-15-இல் நடைபெற்ற ICET-இன் (International Council on Education for Teaching) **1963**-ஆம் ஆண்டு மகாநாட்டின் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்ட விஷயம், வருங்கால ஆசிரியர்களைத் தயாரித்தல் என்பதாகும். அவ்விரண்டுநாள் மகாநாட்டிற்கு 18 தேசங்களிலிருந்து ஏறக்குறைய நூறு அறிஞர்கள் விஜயஞ்செய்தனர்.

ICET-இன் தலைவராகிய **வில்லியம் ஜே ஹாகர்டி** என்பவர் அம் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார். WCOTP-இன் ஸெக்ரெடரி-ஜனரலான **Dr. வில்லியம்ஸ் G. கார்** என்பவர் அம் மகாநாட்டில் கலந்துகொண்டவர்களை வரவேற்றார்; உலகத்திலுள்ள பள்ளிகளில் போதனைமுறையை உயர்த்துதற்கு ஆசிரியஅறிஞர்கள் ஆற்றவேண்டிய தலைசிறந்த பணியை வற்புறுத்திக் கூறினர்.

அம் மகாநாட்டின் மிகச் சிறந்த உபந்யாசம் 'பிரேஸிலியா' பல்கலைக்கழகத்தின் தலைவரான **Dr. அலிஸியோ டிக்ஸிரா** என்பவரால் செய்யப்பட்டது. அன்றியும், 'காஸ்டா ரிகா' பல்கலைக்கழகத்தின் கல்வித்துறைத்தலைவரான **Dr. எம்மா கப்போவா** என்பவரும், WCOTP-ஐச் சார்ந்த கண்டுகேட்டறியுங் கல்விக்கமிட்டியின் காரியதரிசியும் U.S.A. நாட்டுத் தேசிய கல்விச்சங்கத்தின் கண்டுகேட்டறியுங் கல்வித்துறையின் நிர்வாகக்காரியதரிசியுமான **Dr. அன்ன ஹையர்** என்பவரும், 'ஃபண்டகா ஜோவா பாப்டிஸ்டா டி அமரல்'-இன் கல்வி 'டெலிவிஷன்' பகுதியின் டைரக்டரான திருமதி 'ஆல்பிரடின டி பைவா இ ஸொஜா' என்பவரும் தாம் எழுதிவந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளை அம் மகாநாட்டில் படித்தனர்.

'Dr. தியோடார் ஹரலம்பைட்ஸ் - கிரேக்க நாட்டு 'ரோட்ஸ்' ஆசிரியர்சங்கத்தைச் சார்ந்தவர் - ICET-இன் முதல் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

'Dr. எம்மா கம்போவா' என்பவரும், 'நைஜீரியா ஸெயின்ட் ஆண்ட்ரூஸ்' கல்லூரியின் தலைவரான 'கானன் S. I. ஹேல்' என்பவரும் ICET-இன் நிர்வாகக்கமிட்டியின் அங்கத்தினராக இரண்டாண்டுக்காலம் இருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். U. S. A. நியூயார்க் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறைத்தலைவரான 'Dr. வால்டர் ஆன்டர்ஸன்' என்பவர் இரண்டாண்டுக்காலம் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினராக இருத்தற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1

2

3

5

[ரியோ நகரில் நடைபெற்ற மகாநாட்டைப்பற்றிய முக்கிய நிழற்படங்கள்: (1) பேராசிரியர் டார்ஸி ரிவிரோ; இவர் பிரேஸில் நாட்டு ராஷ்டிரபதியின் பிரதிநிதியாக வந்து, அம் மகாநாட்டைத் திறந்துவைத்தபொழுது பிரஸங்கஞ் செய்கின்ருர். (2) 1963-நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்; இடமிருந்து வலம்: 'ஜோஸப் இம்பென்ஸா - டுவி', காங்கோ லியோபோல்டுவில்லி); 'டியோஃபில் பிரிச்னர்', ஸ்விட்ஸர்லாந்து; 'ஆல்மன் ஸோட்டோ கன்ஸாலஸ்', U.S.A.; 'A;W.S. ஹெட்சின்ஸ்', இங்கிலாந்து; 'டெனிஸ் பாரஸ்டீர் பிரான்ஸ் ; ' ஜார்ஜ் ஆஷ்பிரிட்ஜ்', நியூஜிலாந்து; 'கூயென் கூசின்', வியட்-நாம்; 'மைக்கேல், ஸ்விட்ஸர்லாந்து. (3) 'தாய் ஸி சும்' (கொரியா); பசிபிக் பகுதிக்குப் பிரதிநிதியர்க நிர்வாகக்கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். (4) வரவேற்புக் கமிட்டித்தலைவர்கள்: ஸ்ரீமதி 'மரியா வீகஸ் டி மெடிரோஸ்', பிரேஸில் நாட்டு ஆரம்பஆசிரியர்கள்சங்கத்தின் தலைவர்; பேராசிரியர் 'மோரி ராடி ஸௌஸா, பிரேஸில் கல்விச் சங்கத்தின் தலைவர். (5) 'கவர்னர் கார்லோஸ் லாஸண்டா' (குணபரா நாடு), WCOTP-இன் தலைவரான 'ஸர் ரோனல்டு கௌல்டு' என்பவரோடு உரையாடுகின்ருர்; இவர் அம் மகாநாட்டின் இறுதிக்கூட்டத்தில் பிரஸங்கஞ்செய்தார்.]

ICET-இன் ஆசியப்பிரதேசக் காரியதரிசியாகத் தொண்டாற்றி-வந்த குமாரி S. துரைசாமி என்பவர் செய்த ராஜீனமாவை அக்'கௌன்ஸில்' வருத்தத்துடன் ஏற்றுக்கொண்டது.

கிராமக்கல்வி :

WCOTP கிராமக்கல்விக்கமிட்டி 'ரியோ' மகாநாட்டில் தன் இறுதிக் கூட்டத்தை நடத்திற்று. ஆங்கு மூன்றுவகைத்திட்டம் ஆலோசிக்கப் பட்டது: (1) "கிராமப்பகுதிகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளின் ஆசிரியரை நியமித்தல்"—என்னும் விஷயத்தைப்பற்றி ஆராய்தற்கு விடுத்த வினக்களுக்கு அளிக்கப்பெற்ற விடைகளைப்பற்றிய முடிவு; (2) இலத்தீன் அமெரிக்கா நாட்டு கிராமப்பகுதிகளில் உள்ள குழந்தைகளின் கல்வியைப்பற்றிய பிரச்சினைகள்; (3) கிராமக்கல்வியில் ஏற்பட்டுள்ள பல முக்கிய முன்னேற்றங்கள்.

தான் சேகரித்துள்ள நல்ல அனுபவங்களின் அறிக்கைகள் WCOTP-இன் கிளைச்சங்கங்களுக்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும் என்று அக் கமிட்டி சிபாரிசுசெய்தது. WCOTP நிர்வாகக் கமிட்டி இரண்டு முக்கியமான பிரச்சினைகளை உடனடியாக ஆராய்தல் வேண்டும் என்று கூறியுள்ளது. அதனை அக் கிராமக்கல்விக்கமிட்டி ஆமோதிக்கின்றது. அவ்விரண்டு பிரச்சினைகளும் வருமாறு:

1. எல்லாவிடங்களிலும் உள்ள குழந்தைகளுக்குக் கல்விகற்பித்தற்குப் போதுமான ஆசிரியர்களை முதன்முதல் சேர்த்தல், தயாரித்தல், தகுதிபெற்றோர்க்கு மீண்டும் போதனமுறைப்பயிற்சியை அளித்தல்.

2. உரிமைபெற்ற சமூகத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் அடைதல் வேண்டிய இறுதிக்குறிக்கோள்களுக்கு ஏற்ற பாடத்திட்டங்களை வகுத்து அமைத்தல்; ஆயின், அவற்றின் பகுதிகள், கற்பிக்கப்படுங் குழந்தைகளின் வாழ்க்கைக்குத் தொடர்புள்ளனவாக இருத்தல் வேண்டும்.

அந்தக் கிராமக்கல்விக்கமிட்டி அவ்வாறு வேலைசெய்ய, 'ஃபிராங்க் ஃபர்ட்' மகாநாடு (1957) அதிகாரமளித்தது. அக் கமிட்டி 1958-இல் தன் வேலையைத் தொடங்கிற்று. அது இவ்வைந்தாண்டுகளில் இரண்டு விஷயங்களைப்பற்றி ஆராய்ந்தது. கிராமப்பகுதிகளில் குழந்தைகள் பெறுங் கல்வியின் தரத்தையும் அளவையும்பற்றியது முதலாவது; இரண்டாவது, ஆசிரியர்களை நியமிக்கும் பிரச்சினைகளைப்பற்றியது; மூன்று ஸர்வதேச ஏஜென்ஸிகளும் 52 தேசங்களிலுள்ள எழுபது சங்கங்களும் இவ்வாராய்ச்சிகளுக்கு வேண்டிய செய்திகளைச் சேகரித்து அளித்தன.

அக் கிராமக்கல்விக்கமிட்டி, 'ரியோ' மகாநாடு முடிந்தவுடன், விவசாயக்கல்வியைப்பற்றிய கருத்தரங்கொன்றனைக் கூட்டி வெற்றிபெற நடைபெறுதற்கு WCOTP-'டெக்னிகல் வொகேஷனல் கமிட்டி'-யோடு ஒத்துழைத்தது.

பத்திரிகையாசிரியர்களின் மகாநாடு:

'ரியோ' நகரில் WCOTP மகாநாடு கூடுதற்கு முன்னர், ஆகஸ்டு 4-7 தேதிகளில் ஆசிரியர்சங்கங்களின் ஸஞ்சிகைகளின் ஆசிரியர்கூட்டம்

நடைபெற்றது. ஆங்கு, தாம்தாம் அறிந்தவற்றையும் தங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் கலந்து உரையாடுதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. பல்வேறு . மொழிகளில் வெளியிடப்படும் ஸஞ்சிகைகளின் பிரதிநிதிகளாக 31 தேசங்களிலிருந்து வந்த அறிஞர்கள் அக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

WCOTP நிர்வாகக்கமிட்டியங்கத்தினரான திரு. 'ஆல்மன் ஸோடோ கன்ஸாலஸ்' (காஸ்டா ரிகா) என்பவரும், WCOTP-யின் செய்தித்துறை 'டைரக்டர்'ரும் அவ்வாசிரியர்மகாநாட்டின் டைரக்டருமான 'Dr. பால்டிவில்லி' என்பவரும் ஆங்குப் பிரஸங்கஞ் செய்தனர். "லத்தீன் அமெரிக்காவில் இக்காலக்கல்வியின் சில பெரும்பிரச்சினைகள்"—என்னும் பொருள்பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரையொன்று பேராசிரியர் 'நெல்ஸன் லோகஸ் ஹ்யூபர்ட்' (உருகுவே) என்பவரால் படிக்கப்பட்டது. பின்னர், அப் பிரச்சினைகளைப்பற்றி ஆசிரியர்ஸஞ்சிகைகள் செய்யவேண்டிய கடமைகள் விவாதிக்கப்பட்டன.

"ஆசிரியத்தொழிற்சங்கங்கள் - ஆசிரியர் தொழிலின் குரல்" - என்பதுபற்றிய ஆராய்ச்சிக்கட்டுரையொன்று 'Dr. எம்மா காம்போவா' (காஸ்டா ரிகா) என்பவரால் படிக்கப்பட்டது. பின்னர், ஆசிரியர்ஸஞ்சிகைகள் ஆசிரியர்சங்கங்களுக்கும் தொழிலுக்கும் எவ்வாறு சிறந்த முறையில் பணியாற்றுதல் இயலும் என்பதுபற்றிய விவாதம் நடைபெற்றது.

பத்திரிகையின் அமைப்பு, படங்கள் அச்சிடும் முறை இவற்றைக் கருத்தில் கொண்டு நல்லதொரு ஆசிரியர்சஞ்சிகையைப் பயன்படும் முறையில் தொகுத்து வெளியிடுவது"—என்பதுபற்றிய தொழிற்றுறைவிளக்கம் 'Dr. அடால்ஃபோ ஜிமேனஸ் ஹார்நாண்டஸ்' என்பவரால் அளிக்கப்பட்டது. "ஆசிரியர்சஞ்சிகைக்கு வேண்டிய பொருளைத் திரட்டும் முறை"—என்பதுபற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்று 'Dr. ரோஸல்வோ ஃப்ளாரெண்டினோ டி ஸெஸா' என்பவரால் வாசிக்கப்பட்டது.

O Cruzeiro—என்பது படங்களோடு வெளியிடப்படும் வாரச் செய்திப்பத்திரிகை. அது 'பிரேஸில்' நாட்டிற்குப் பயன்படும்படி போர்ச்சுகீசிய மொழியிலும், லத்தீன்அமெரிக்காவிலுள்ள பிறநாடுகளுக்குப் பயன்படும்படி ஸ்பானிஷ் மொழியிலும் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. இம் மகாநாட்டில் கலந்துகொண்டவர் அப் பத்திரிகை அச்சிடும் இயந்திரத்தைப் பார்ப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அம் மகாநாட்டின் இரண்டாம் நாளில், அமெரிக்கநாட்டுக் கல்விப்பத்திரிகைச்சங்கத்தின் தலைவரான திரு. 'பென். P. பிராடின்ஸ்கி' என்பவர் "நம் ஆசிரியர்ஸஞ்சிகைகளை வளம்பெறச் செய்யும் முறை" என்னும் பொருள்பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரையைப் படித்தார். அதில் அச்சிடும் முறைகள், விளக்கங்கள், பத்திரிகையின் அளவு முதலிய செய்திகளும் கூறப்பட்டன.

பேராசிரியர் 'டோரோடியோ ஹெளலோ ஹர்ஞண்டிஸ்' (மெக்ஸிகோ), "தேர்ந்தெடுத்த சில ஆசிரியர்ஸஞ்சிகைகளில் உள்ள கருத்துக்களைப்பற்றிய ஆராய்ச்சிவிளக்கம்"-என்பதுபற்றிய ஆராய்ச்சிக்—

கட்டுரையொன்றைப் படித்தார். அதன்பின்னர், ஆசிரியர்ஸஞ்சிகைகளில் அடங்கியிருக்கவேண்டிய கருத்துக்களைப்பற்றிய விவாதம் நடைபெற்றது.

"ஆசிரியர்சங்கங்களும் ஸர்வதேச ஒத்துழைப்பும்" என்பதுபற்றிய விவாதத்தோடு, அந்நான்குநாள்மகாநாட்டின் இறுதிக்கூட்டம் சிறப்பாக முடிந்தது. பின்னர், அவ்வாசிரியர்கள், லத்தீன் அமெரிக்காவில் விநியோகிக்கப்படும். Manchete—என்னும் பத்திரிகை அச்சிடப்படும் இயந்திரசாலைக்குச் சென்று, கண்டுகளித்தனர்.

ஆரோக்கியக்கல்வி

'ரியோ' நகரில் ஆகஸ்டு 16-17-இல், ஆரோக்கியம், உடற்பயிற்சிக் கல்வி, பொழுதுபோக்கு இவற்றைப்பற்றிய சர்வதேசக்கௌன்ஸிலின் ஆருவது காங்கிரஸ் நடைபெற்றது. அதில் பத்தொன்பது நாடுகளின் பிரதிநிதிகளாக நூற்றைம்பது அறிஞர் கலந்துகொண்டனர். ஆரோக்கியக் கல்வியைப்பற்றி WCOTP-ICHPER கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் டென்மார்க் கல்வியமைச்சரான 'Dr. ஹெல்லெக் பீடர்ஸன்' என்பவரும், குழந்தை ஆரோக்கியத்திட்டங்களை வகுப்பதில் வழிகாட்டி-யாய் இருப்பவரான 'லியோனல் கன்ஸாகா M.D.' (பிரேஸில்) என்பவரும் பிரசங்கஞ்செய்தனர். அம் மகாநாட்டில் UNESCO-இன் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டவையும் காங்கிரஸுக்குச் சற்று முன்னர் முடிக்கப்பட்டவையுமான ICHPER விஞவிடையறிக்கைகளைப்பற்றிய விவாதங்கள் நடைபெற்றன.

ஸ்ரீமதி 'லிஸ்லாட் டீம்' (ஜர்மனி), "பாடத்திட்டத்தில் உடற்-பயிற்சிக்கல்வியும் விளையாட்டுக்களும்" என்பதுபற்றிய அவ்வறிக்கை-முதற்பகுதியை அம் மகாநாட்டில் வெளியிட்டார். இப்பகுதி நாற்பத்தெட்டு நாடுகளில் உள்ள தொடக்க நடுத்தர ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் காணப்படும் அமைப்பு, உடற்பயிற்சிக்கல்வியின் அளவு, விளையாட்டுத்-திட்டங்கள் முதலியவற்றைப்பற்றிய விளக்கமான கருத்தை அளிக்கின்றது. திரு. 'ஸிஸி பர்த்தோலோமி' (.·.பிலிப்பைன்ஸ்) "உடற்பயிற்சிக்-கல்விக்கு வேண்டிய ஆசிரியர்பயிற்சி" என்பதைப்பற்றிய இரண்டாம் பகுதியை வெளியிட்டார். உடற்பயிற்சிக்கல்வியாசிரியர்பயிற்சிக்கு வேண்டிய பாடத்திட்டம், அவ் வாசிரியப்பயிற்சிக்குப் பயன்படுத்துங் கருவிகள், அப் பயிற்சிக்குரிய நிலையங்களை நடத்தும் முறை, அளிக்கப்-படும் தகுதிப்பத்திரங்கள், அதற்கு வேண்டிய காலவளவு ஆகிய இவை இப் பகுதியில் அடங்கியுள்ளன. மூன்ரும்பகுதி 'உடற்பயிற்சிக்-கல்வியாசிரியர்களின் நிலை' என்பதைப்பற்றிய ஆராய்ச்சி. அதனை அக் கூட்டத்திற்கு ஸமர்ப்பித்தவர் திரு. ஸில்வெஸ்டர் தாமஸ் (லைபீரியா). இவ்வறிக்கை, அவ்வாசிரியர்களின் தொழில் பொருளாதார தேசிய நிலை-களைப்பற்றிய சுருக்கமாகும்.

1



2

3

4

பல ஆசிரியர்சங்கங்களின் பிரதிநிதிகள், ரியோ மகாநாட்டுக்குச் செல்லும்போதும் தம் ஊருக்குத் திரும்பும்போதும், காரியாலயத்துக்கு விஜயஞ் செய்தனர்: **1.** ஜப்பான் ஆசிரியர்யூனியனின் பிரதிநிதிகள்; **2.** அந்த யூனியனின் தலைவரான **ஸதாமித்ஸு மியஜோஹரரும்**, அது 'ஸெகரெடரி-ஜனர'லுக்கு அளித்த தட்டும். **3.** நியூஸீலந்து கல்விநிலையத்தைச் சார்ந்த **ஜார்ஜ் R. ஆஷ்பிரிஜ்.** 4. அரபு ஆசிரியர்சங்கத்தின் பிரதிநிதிகள்: 'Dr. அஹமத் அப்துல் சத்தர் அல் - ஜவாரி', ஈராக் கல்வியமைச்சர் (1); UAR கல்வியமைச்சர் 'எல்-ஸையத் மஹம்மது யூசஃப்' (2); UAR கல்வியமைச்சுத்துறையைச் சார்ந்த 'மோஹி எட்டின் அபு ஷாதி' (3); அரபு ஆசிரியர்-யூனியனைச் சார்ந்த 'எல் ஸையத் அலி மஹம்மது'; இவர்களுக்கு நடுவில் நிற்பவர் 'ஸெகரடெரி-ஜனரல் வில்லியம் G. கார்'. (இடக்கோடியில் உள்ளவர்) WCOTP காரியாலயத்தில் வேலைபார்ப்பவரான 'மஹம்மது ஷீஹாப் எட்டின்' என்பவரும், Dr. முஸ்தாஃபா ஷாகா (UAR-இன் Cultural counselor ஆக 'வாஷிங்டன்' D. C.-யில் இருப்பவர்) என்பவரும் ஆங்கு உளர். **5.** (டோகோ) கல்வியமைச்சுத்துறையைச் சார்ந்த 'அபௌலாஸீஸி (1); நைஜர் தூதர் காரியாலயத்தின் 'Cultural attache' ஆன 'மஹம்மது செய்தௌ' (2); (வலக் கோடி) WCOTP-இன் ஆஃப்ரிகத் திட்டத்தின் தனியாலோசகரான 'க்லேபர்

வீலாட்'; (இடக்கோடி) உதவி ஸெகரெடரி-ஜனரலான ஜான் M. தாம்ஸன்.
6. M.Deutscher Phillogenverband-இன் தலைவரான 'ஃப்ரான்ஸ் எப்நர்'.]

5

6

எடுகேஷ்ன் எசோ என்னும் மாத சஞ்சிகை. WCOTP-இன் வெளியீடாகிய எகோ-இன் ஆசிய வெளியீடாக ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. UNESCO-என்னுஞ் சங்கம் இச் சஞ்சிகைக்குப் பொருளுதவி செய்கின்றது.

ஸர் ரோனல்டு கௌல்டு,	தலைவர்
S. நடராஜன்,	உப தலைவர்
வில்லியம் G. கார்,	ஸெகரெடரி-ஜனரல்
ஜான் M. தாம்ஸன்	உதவி ஸெகரெடரி-ஜனரல்
பால்டுவின் லீ,	Div. Info. Services
பாரபாரா P. ஹஸ்கின்ஸ்,	ஆசிரியர்

ஆசிரியர் குழு :

ராபர்ட் லாப்,
ஜீன் பால் ஸவரி
ஜாகலின் லாஃப்லர்
ஹிரோஷி யோஷிடா (டோகியோ)
ட்ரான் பிக் லான் (வியத்-நாம்)

எடுகேஷன் எகோ, இந்தியா, சென்னை-2, மௌண்ட் ரோடு, நரஸிங்கபுரம் தெரு 21-இல் உள்ள G. S. அச்சுக்கூடத்தில் திரு. S. ராமஸ்வாமியால், அச்சிடப்படுகின்றது. WCOTP-இன் உபதலைவரான திரு S. நடராஜன் இதன் ஆசிரியர்; WCOTP-இன் சார்பாக வெளியிடுபவர்.

ஆசிரியர் அலுவலகம் ; S. I. T. U. காலனி, 3, திருவேங்கடம் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28, இந்தியா.

வருஷச் சந்தா — ரூபாய் 2-50